கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தஞ்சையில் அவ்வாறு ஒன்றை ஏற்படுத்த முயற்சி நடந்து கொண்டு வருகிறது. அதற்கு தஞ்சாவூர் பெடரேஷனைச் சேர்ந்த தலைவர் கூட வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறார்.

திரு. எம். தண்டாயுதபாணி : திருவாரூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் அந்த மில்லை அரசினரே ஏற்படுத்த இருக்கிறார்களா ? அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : போர்டு பவுண்டேஷன் மூலம் ஆரம்பிப்பதாக இருக்கிறோம்.

**736 கேள்வி.— திரு. ஆ. கு. சுப்பையா :* கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு அரிசி மில்கள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இந்தத் திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ் நாட்டில் சிதம்பரம், நாமக்கல், ராசிபுரம், கூட்டுறவு அரிசி ஆலைகளில் பங்கு பெற்றிருக்கிறார்களா ? அந்த ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டனவா ? இல்லையென்றால் ஏன் காலதாமதப்படுகிறது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : என்னிடத்தில் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, with a view to establish rice mills in the co-operative sector, have the Government issued any instructions to the Board of Revenue and the Collectors not to issue licence for private persons?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த விதமாக ஒன்றும் இல்லையென்று முதல் கேள்விக்கே பதில் சொன்னேன்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : புதிதாக இனிமேல் ரைஸ் மில்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்று மத்திய உணவு அமைச்சர் திரு. சுப்பிரமண்யம் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் படித்தேன். அதன் நிலைமை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அப்படி சொன்னதாக எனக்குத் தெரியவில்லை.

MR. SPEAKER : The hon. Member cannot contradict the Hon. Minister for Food on the basis of a newspaper report of what the Hon. Minister for Food in the Centre has said.

27th July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான உத்தரவை இந்த சர்க்கார் போடவில்லை என்பதைத்தான் நாங்கள் சொல்ல முடியும். அதைச் சொல்லியிருக்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதால் தனியார் அரிசி ஆலைகளை படிப்படியாக தேசியமயமாக்கும் திட்டம் ஏதாவது சர்க்காருக்கு உண்டா ? அதை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திட்டம் இல்லை. இந்த விதமான ஆலோசனை இருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலம் பகுதியில் அரசினர் வாடகைக்காக ஒப்புக்கொண்ட அரிசி மில் வேலை செய்கிறதா, இல்லையா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : பெடரேஷன் மூலம் எடுத்து வேலை செய்வதாக இருந்தது. ஆனால் அது எடுத்து வேலை செய்யப்படவில்லை.

புலவர் கா. கோவிந்தன் : அரிசி மில்லுக்கு லைசென்ஸ் வேண்டி ஒவ்வொரு ஊரிலும் இருந்து 10, 15 பேர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கக் கொள்கையை திட்டவட்டமாக தெரிந்து கொண்டால் அவர்கள் அலைவது மிச்சப்படும். சர்க்கார் நடத்துவது, கூட்டுறவுத் துறைக்கு அளிப்பது அல்லது வெளியாருக்கு தருவது என்பது பற்றிய அரசாங்கக் கொள்கை என்னவென்று திட்டவட்டமாக தெரிவிக்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தனியார் துறையிலிருந்து ஒவ்வொரு ஊரிலிருந்து 10, 15 பேர்கள் அல்ல, எவ்வளவோ பேர்கள் போடுகிறார்கள். ஆனால் அரசாங்கம் அங்கு நெல் கிடைக்குமா, அரைக்க போதுமான நெல் கிடைக்குமா என்பதையெல்லாம் பார்த்துத்தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள்.

மருத்துவமனை விஸ்தரிப்பு (திட்டக்குடி)

*737 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா திட்டக்குடி ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டி எவ்வளவு நிதி திரட்டியுள்ளதாக திட்டக்குடி ஆஸ்பத்திரி கமிட்டி சர்க்காருக்கு தெரிவித்துள்ளது ?

(இ) திட்டக்குடி ஆஸ்பத்திரி கமிட்டி திரட்டிக் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு அரசாங்கம் மேலும் அதிக தொகைபோட்டு ஆஸ்பத்திரி கட்டிடத்தை விஸ்தரித்து அதிக படுக்கை வசதிகளைச் செய்து தர உத்தேசமுண்டா ?